DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 47/2015**

**Deposition of Witness for Prosecution : P.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர்.சிவகுமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 05.02.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லிப்பட்டினம் தனியார் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். 16.02.2007 அன்று மாலை 7.15 மணிக்கு திருத்துறைப்பூண்டி பெஸ்ட் மெடிக்கல் சென்டரில் நான் மருத்துவராக பணியாற்றிய போது கணேசன் என்பவர் லெனின் என்பவரை மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து வந்து உள்நோயாளியாக சேர்ந்தார். அவருக்கு நான் சிகிச்சை அளித்தேன். சிகிச்சையில் இருந்த நபருக்கு இடது கால் தொடையில் காயமும், தலையின் பின்பக்கம் கண்ணாடி துகள்கள் காயம் இருந்தது. 20.02.2007 அன்று சிகிச்சை அளித்து அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் தான். நான் வழங்கிய காயச் சான்றிதழ் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து பதிவேட்டு நகல் என் கைவசம் உள்ளது அதில் லெனின் உங்களிடம் தெரிந்த நபரால் தாக்கப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சோடா பட்டிலால் தாக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் தென்புலம் மேல தெருவில் தாக்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால்

சரிதான். இடது தொடையில் ஒரு வீக்க காயத்தினை தான் காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பார்க்கும் போது லெனினுக்கு தலையில் எவ்வித காயம் இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட காயங்கள் வேறு விதமாக ஏற்படலாம் என்றால் சரிதான். அவர் சொன்ன 1 மணி நேரத்திற்கு முன்னால் காயம் ஏற்ப்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. வீக்க காயத்தில் நிற மாற்றம் எதுவும் நான் பார்க்கவில்லை அதனால் அதனை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.